දුරකථන
தொலைபேசி
Telephones
011-2136600
011-2136650

ලේකම්
செயலாளர்
Secretary
011-2136602

ෆැක්ස්
தொலைநகல்
Fax
011-2876169
011-2876181

විද්‍යුත් තැපෑල
மின் - அஞ்சல்
E - mail
info@psc.gov.lk

වෙබ් අඩවිය
இணையத்தளம்
Website
www.psc.gov.lk

**රාජ්‍ය සේවා කොමිෂන් සභා කාර්යාලය**

**அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்**

**OFFICE OF THE PUBLIC SERVICE COMMISSION**

අංක 1200/9, රජමල්වත්ත පාර, බත්තරමුල්ල
இல. 1200/9, இரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை
**No. 1200/9, Rajamalwatta Road, Battaramulla**

මගේ අංකය
எனது இல.
My No. PSC/APP/11/5/7/2022

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date

2023 பெப்புருவரி மாதம் 2. ஆம் திகதி

**அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் : 02/2022(I)**

அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள்,

**அரசாங்க சேவை ஆணைக்குழு நியமிப்புச் செய்யும் அதிகாரியாக செயற்படும் நாடளாவிய சேவைகளின் மற்றும் அமைச்சுக்கள்/திணைக்களங்களின் நிறைவேற்றுநர் சேவை வகுதிகளின் தரம் I பதவிகளுக்கு உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்யும் நடைமுறை (முழுநேர அடிப்படையில் கடமைகளை மேற்கொள்ளும் நியமனங்களும் உள்ளடங்கலாக)**

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 02/2022 ஆம் இலக்க மற்றும் 2022.09.15 ஆம் திகதிய சுற்றறிக்கையின் ஏற்பாடுகளைப் பின்வரும் முறையிலான நியமனங்களுக்கும் ஏற்புடையதாகக் கொள்ளலாகாது என அவ் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

I. ஏற்புடைய நிருவாக அதிகாரி, சேவையின் தேவை நிமித்தம் உச்சபட்சம் 03 மாதங்களுக்கு செல்லுபடியாகும் வகையில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தழுவு அங்கீகாரத்திற்கு உட்பட்டு குறித்த சேவையின் தரம் I பதவிகளில் முழுநேர அடிப்படையில் பதிற் கடமையாற்றுவதற்கு நாடளாவிய சேவையொன்றின் தரம் I இன் பின்வரும் வகுதிகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்களை நியமித்தல்.

(அ) தற்காலிகமாக விடுவிக்கப்பட்டு அரச சேவைக்கு அப்பாலான பதவிகளிலிருந்து மீளவும் அரச சேவைக்கு அனுப்பி வைக்கப்படும் உத்தியோகத்தர்கள்.

(ஆ) சேவையின் தேவை நிமித்தம் தற்போது வகிக்கும் பதவிகளுக்கு வெளியே இடமாற்றம் செய்யப்படும் மற்றும் விருப்பத்திற்குரிய சேவை நிலையங்களில் உரிய உச்சபட்ச சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்யும் உத்தியோகத்தர்கள்.

II. அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் நாடளாவிய சேவை மற்றும் நிறைவேற்றுநர் சேவை வகுதியின் தரம் I உத்தியோகத்தர்களின் உள்ளக இடமாற்றங்கள்.

02. மேலும், நாடளாவிய சேவைகளில் அல்லது நிறைவேற்றுநர் சேவை வகுதிகளில் வேறு வகையில் பெயரிடப்பட்டுள்ள சமாந்தரமான தரங்களும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள “தரம் I” இனுள் உள்ளடங்குதல் வேண்டும் என அரசாங்க சேவை ஆணைக்குழு மேலும் தீர்மானித்துள்ளது.

03. இச் சுற்றறிக்கைத் திருத்தமானது 2023.02.02 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

Murugen

தனுஜா முருகேசன்
பதில் செயலாளர்
அரசாங்க சேவை ஆணைக்குழு